1973 மார்ச் 24]

திரு. எம். சுரேந்திரன் : இந்த டாக்ஸி டிரைவர்கள் சங்கத்திற்கு எத்தனை பேர்கள் இருந்தால் அமைக்க முடியும் என்கிற விவரத்தை அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எவ்வளவு பேர்கள் என்ற கணக்குக் கிடையாது. அந்த சொசைடி வயபிள் யூனிட்டாக இருக்க வேண்டும் என்பது தான் நமது நோக்கம். ஆகவே, மாவட்டத்திற்கு ஒரு சங்கம் என்று அமைத்து அந்த மாவட்டத்தில் உள்ளவர்களை எல்லாம் அதன் கீழ் கொண்டு வந்தால் வயபிள் சொசைடியாக அமையக்கூடும் என்பது அரசாங்கத்தின் கொள்கை.

திரு. கு. காமாட்சி : டிரைவர் கட்ட வேண்டிய தொகையை ரொக்க மாகக் கட்டச் சொல்கிறார்களே, அதற்கு சொத்து ஜாமீன் கொடுத்தால் ஏற்றுக்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நூற்றுக்கு நூறு அவர்களுக்குக் கடன் கொடுத்து விட்டால் திருப்பிக் கட்டுவதில் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே முன் தொகையை அரசாங்கமே தன் பங்குத் தொகையாகக் கொடுக்க லாம் என்று யோசிக்கப்படுகிறது.

திரு. கோ. இளங்கோவன் : ஆட்டோ ரிக்ஷாக்கள் கூட்டுறவுச் சங்கங் களின் மூலம் வழங்கப்படுகிறது என்றார்கள். சென்னையில் தான் வழங்கப் படுவதாக அறிகிறேன். மற்ற இடங்களிலும் வழங்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்பு மிகு திரு. செ. மாதவன் : சென்னையில் மட்டுமல்ல, திருச்சி யிலும் தொடங்கப்பட்டிருக்கிறது. இன்னும் எங்கெங்கே தொடங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறதோ அங்கங்கே தொடங்கலாம்.

திரு. கே. எ. வகாப் : தொழில் கூட்டுறவு வங்கிகள் மூலம் டூரிஸ்டு கார்கள் வாங்க கடன் கொடுப்பதை ரிசர்வ் வங்கி ஆட்சேபிப்பதாகத் தெரிகிறது. ஆகவே இதற்கும் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி ஒரு ஆட்சேபணை இருக்கு மானால் அது தவறுதான். நிச்சயம் இதற்கும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

ஈரோட்டில் நீதிமன்றக் கட்டடங்கள்.

* 501 திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ஈரோடு நகரில் மாவட்ட நீதி மன்றம், மற்ற நீதி மன்றங்களுக்காக புதிதாகக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ—ஆ)ம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) : ஈரோடு நகரில் சிவில் நீதி மன்றங்களும், கிரிமினல் நீதி மன்றங்களும் தற்போது வெவ்வேறு இடங்களில் உள்ளன. இவையனைத்தும் ஒரே இடத்தில் இருக்க வேண்டும் என்ற காரணத்தால் ஒரு கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. கட்டிடம் கட்டுவதற்கான இடத்தை அரசின் செலவில் பெற வேண்டியுள்ளது. இதற்கான நில ஆர்ஜித குறிப்புரை அனுப்பும்படி கோயம்பத்தூர் மாவட்ட ஆட்சியாளர் கோரப்பட்டுள்ளார்.

முசிறியில் முன்சீப் கோர்ட்டு.

* 502 வின.-திரு. பெ. சௌந்தர பாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா —

திருச்சி மாவட்டம் முசிறியில் முன்சீப் கோர்ட்டு ஒன்று துவக்கும் உத்தேசம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : குழுவின் அறிக்கையைப் பரிசீலித்த பிறகே ஒரு முடிவு எடுக்க முடியும்.

திரு. பு. செ. முத்துச்செல்வன் : முசிறியில் நீண்ட நெடுங்காலமாக இந்த சிவில் வழக்குகளை நடத்த மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் குளித்தலை போன்ற இடத்திற்குச் சென்று தான் தொடங்க வேண்டியிருக்கிறது. எனவே ஒரு மாத காலத்திற்குள் முசிறியில் ஒரு முன்சீப் கோர்ட்டைத் தொடங்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் குழு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையையும் ஒரு சிபார்சாகச் செய்திருக்கிறது. அதைப் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

பள்ளப்பட்டிக்கு குடி நீர் வழங்கல்.

* 491 வின.—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பள்ளப்பட்டி பேரூராட்சி மன்ற குடிநீர் திட்டம் தற்பொழுது எந்த அளவில் உள்ளது?

(இ) இத்திட்டம் பூர்த்தியடைய இன்னும் எவ்வளவு காலம் ஆகும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) பள்ளப்பட்டி குடிநீர்த் திட்டத்திற்கு அரசு ஆணை 44 நாள் 6–1–71-ல் அரசு ஒப்பளிப்பு ரூ 22.75 இலட்சத்திற்கு அளிக்கப்பட்டு தலைப்பிடத்தில் சேகரிப்புக் கிணறு வேலைகள்,